ரெஜிஸ்டர் நெ. M. 3855.

கிராமப் பஞ்சாயத்து பத்திரிகை

Vol. 5. ஜனவரி, 1943 நெ. 10.

எடிடோரியல் கமிட்டி.

ஸ்ரீமான்கள்

பி. எஸ். குமாரஸ்வாமி ராஜு, எம்.எல்.ஏ.

எஸ். சத்தியநாராயண

எடிடர்.

ஸ்ரீமான்

வி. வெய்யன்ன, பி.ஏ., பி.எல்.

சென்னை மாகாண பஞ்சாயத்து போர்டுகளின் யூனியன்

டெலிபோன் நெ. 86166.

பொருள் அடக்கம்.

1. தலையங்கம்.—

கனம் டி. ஜி. ரூதர்போர்டு துரைக்கு கவர்னர் பதவி ... 327

கிராம நன்மைக்காக ஐக்கிய சங்கம் ... 328

ரஸ்தாக்கள், சாலைகள், வண்டிபோகும் சாலைகள், நடைபாதைகள் முதலியவைகளின் சீர்திருத்தமும், பராமரிப்பும் 331

குடிகள் தங்கள் சொந்த உபயோகத்திற்கு தான்யங்களை வைத்துக்கொள்ள வேண்டும் 331

2. வைக்கோல் கூழிலிருந்து காகிதம் — ... 332

3. வர்த்தமானங்களும், குறிப்புகளும் 340

4. மலயாளம் பஞ்சாயத்து போர்டு சிப்பந்திகள் மகாநாடு ... 342

கிராம பஞ்சாயத்து போர்டின் கடமை.

கிராமத்தின் சௌகரியத்துக்காக கிராம ஜனங்களின் சரீர ஆரோக்கியம் அவசியம். ஆகையால் சகல வியாதி நிவாரணியாயிருக்கும்

அம்ருதாஞ்சனத்தை

கிராமத்திலேயே இருக்கும்படியாய் பார்த்துக் கொள்ளவேண்டும்.

The Village Panchayat Journal.

VOL. V] JANUARY, 1943. [No. 10.

The Editorial Committee do not hold themselves responsible for views expressed by contributors. Contributors are requested to write legibly and on one side of the paper. Manuscripts will not be returned unless stamps are sent to cover postage. Matter intended for the issue of any particular month should reach the Committee before the 15th of the previous month.

Mr. T. G. Rutherford to be Governor.

Mr. T. G. Rutherford, C.I.E., I.C.S., the friend of Panchayats has been appointed by His Majesty as Governor of Bihar for a period of four months. We congratulate him heartily. We know he will carry with him the good wishes of a very large number of people in our Panchayat areas who have looked forward to him for bettering the state of rural areas. Both as Registrar-General of Panchayats and as Adviser to H. E. the Governor in charge of Panchayat, he has evinced keen interest in Panchayats and Rural Population. He, as Chairman of the Select Committee on the Panchayat Bill showed his real sympathy for Panchayats and a realistic grasp of their needs and we hoped to see the fruits of his labours before he left us.

The Provincial Union of Panchayats is thankful for him for the courtesy and regard he extended to it and the weight he gave for its views. The Panchayats miss a Popular Officer. But they have the satisfaction that he is going to another place of High honour which he richly deserves. We pray Almighty to grant him Long Life and Health.

Co-operation for Village well-being.

T. Austin Esq., Adviser to H. E. the Governor, in opening the Conference of Village officers at Tanjore on the 11th of this month made very apt reference to Village life as a whole. He quoted history and said. "An historian has said that the village communities of India embody a tradition of local self-Government, extending for a period of nearly 3000 years and that Village Autonomy Constitutes the one continuing and state feature of the social life of India. Before the era of the Empires and the formation of a strong Central Government extending its sway over wider and wider areas the village or

group of villages practically governed itself; there was no distinction between the Central and Local Government. The Village Assemblies performed all the functions of Government."

He recognised that with a strong Centralised Government the power and duties of administration passed out of the village communities gradually. He regretted the obvious neglect in so many villages to improve public health, Sanitary conditions and education. He felt that Village Officers and Village Panchayats could do much by themselves in checking Malaria, Cholera, and other diseases with the advice and help of the Public Health Department. Mr. Austin said that no method was more useful than co-operation. We agree. But we desire that men placed in the position of Mr. Austin should give thought how best to bring about the co-operation between the elements mentioned. The Village Officers are directly under the Revenue Department and fairly overworked The Panchayat is a statutory body with neither the power to require co-operation of the Village Officers, nor of the Health Department. The Health Department has too wide a jurisdiction to manage. It has no purse of its own but has powers under the Public Health Act too drastic for any practical use. The power and duties of administration that passed out of the village communities and remained at a centre removed from the villages have really brought about the break down. This has been recognised and decentralisation has been advocated for scores of years. That is why Panchayats that had ceased to exist have reappeared. The institution has reappeared but its powers and duties have not been sufficiently revived. That is where failure has faced us and still faces us. As Mr. T. A. Ramalingam Chettiar who presided at the Conference rightly said, "The Government has in its administration taken upon itself many functions of the village assemblies. Pitiable is the plight of the villagers in many parts of the country. Unless the villages are invested with more powers nothing practically can be done." This is what every friend of the village has demanded. This was expected to be done, at least in part, by the enactment of the Village Panchayats act sponsored by another adviser to the Governor Mr. T. G. Rutherford. That is what Mr. Ramalingam Chettiar referred to when he said. "The coming into force of the Village Panchayat Act at an early date can certainly ameliorate the condition of the villages." It is not still known when this act will see the light of day. We hope that the Government of which Mr. Austin forms a part will expedite the passing of the Act. Mere passing of the Act will not do. We have long advocated that a scheme of training Rural Guides should be put through and they should be requirbd to work as officers of Joint Committee of Panchayat. That would be the manpowder that shall have to be provided for the Panchayats. It is in training them and giving them and the Panchayats co-operation that Government Departments can well

help the cause. We have often drawn attention to the awful lack of co-operation between departments of Government in Rural work. That there was need for improvement in this matter has been in a way recognised by the Governmeht by starting work on special unity like the Poonamalle Health unit and deputing special officers of different departments to work together. Provinces like Punjab and States like. Cochin have separate Rural Departments. It appears essential that in our Province a Separate Provincial Officer, at any rate, should immediately be put in charge of Panchayats *i.e.*, the office of the Registrar General Panchayats should be revived and in addition to being the head of the Panchayat department, he should also be made responsible for the work of Rural Reconstruction in other areas so that eventually he may be able to spread Panchayat administration to all places in the Provinces; for wherever a scheme of work has to be carried through it will be necessarily his outlook to form a Panchayat. In addition to this certain result, he will also serve as a unifying force bringing the necessary Government departments together for purposes of Rural uplift bringing his unique position to bear on the issue. The present policy of carrying through Rural reconstruction work through the Collectors is really very unsatisfactory. It denies initiative to the local people, to the very little extent to which it may be exercised in such schemes as are being undertaken. It also adds to the work of the overburdened Revenue department and causes delays of unbearable nature. We know of a scheme of a well-work in a village partly financed by a philanthropic gentleman that has taken four years and yet is not complete. If such work could be entrusted to a Panchayat under the fostering care of a Registrar General we are sure matters will be very different. Further still, a Provincial officer with the charge of developing Panchayats will well be able to command that sense of proportion which is necessary to measure the needs of villages as against the more vocal portions of life and advise the Government how best to Assist Panchayats financially and otherwise.

Repairs and maintenance of Streets, Roads, Cart-tracks and Footpaths.

Attention was often drawn in these pages to the great hardship caused by the condition that porambokes should be alienated by the Government to the Panchayats before these could undertake repair and maintenance of streets, roads, cart-tracks and footpaths. We are glad the Government have taken action and passed orders incorporated in circulars 708 and 716 of the Inspector of Local Boards vesting in Collectors the power to permit Panchayats to undertake such

repairs and maintenance without the necessity of alienation proceedings and made these orders applicable to roads, cart-tracks and footpaths even when such are situate outside Panchayat limits. In the case of footpaths the Panchayats may undertake repair and maintenance only if they can financially afford it and such repair and maintenance is really in the interests of a wide public. Presidents of Panchayats are required to obtain the previous sanction of the Collectors concerned for and then apply for grants to the Government. The present provision may not work so well as when such roads, tracks, footpaths and porambokes relating thereto are once for all vested in the Panchayats. But we are sure that the present position would be a decided improvement over the past. We hope District Collectors will, inspite the heavy responsibilities they shoulder otherwise, remember that the well-being, culture and civilisation of the villager largely depend upon the facilities he gets to move about freely in his own village and to get into contact with the outside world and make all necessary arrangements to expedite despatch in granting sanctions under these orders.

Ryots should conserve grain for domestic use.

The ryot in this country is generally so poor that out of economic difficulties he sells away what he produces after the harvest without a thought for his own necessities. In its very nature, it is a tragic situation that a ryot who produces food should sell it away and later buy at a loss. But in these days of shortage of foodstuffs, it is really suicidal. Therefore, Panchayats, as custodians of the welfare of their ryot population, should carry on propaganda to see that the ryot keeps enough of food to carry him through to the next harvest whatever his other necessities may be. We hope Presidents and Panchayatdars take note and do the needful.

கிராமப் பஞ்சாயத்து பத்திரிகை.

Vol. 5 | ஜனவரி, 1943. | No. 10

நிருபர்கள் எழுதும் அபிப்பிராயங்களுக்கு எடிட்டோரியல் கமிட்டி ஜவாப் தாரி ஆகிறதில்லை. இந்தப் பத்திரிகைக்கு எழுதுகிறவர்கள் தெளிவாக காகிதத்தில் ஒரே பக்கம் எழுத வேண்டியது. தபாற்செலவுக்கு வேண்டிய ஸ்டாம்புகள் அனுப்பினாலன்றிக் கையெழுத்துப் பிரதிகளைத் திருப்பியனுப்பமுடியாது. எந்த மாதத்தின் சஞ்சிகைக்காக வியாஸம் அனுப்பப்படுகிறதோ அதற்கு முன்மாதத்தில் 15-ந் தேதிக்குள்ளாக அனுப்பவேண்டும்

தலையங்கம்.

கனம் டி. ஜீ. ருதர்போர்டு துரைக்கு கவர்னர் பதவி.

பஞ்சாயத்துகளின் நண்பரான டி. ஜீ. ருதர்போர்டு துரையவர்கள், C. I. E., I. C. S. நான்கு மாத காலம் பீகார் மாகாண கவர்னராக மாக்ஷிமை தங்கிய அரசரால் நியமிக்கப்பட்டிருக்கிறார். கிராம பிரதேசங்களின் புனருத்தாரணத்திற்காக அவருடைய சகாயத்தை எதிர்பார்த்திருந்த எல்லா பஞ்சாயத்து பிரதேசத்திலுள்ள அநேக நண்பர்கள் அவருக்கு நல் வாழ்த்து கூறுவார்கள் என்பது எங்களுக்கு தெரியும். அவர் போகுமுன் ஒவ்வொரு நிமிஷமும் எதிர்பார்க்கப்படும் கிராம பஞ்சாயத்து சட்டத்தை அவர் நமக்கு அளித்துவிட்டுப் போவார் என நம்புகிறோம். பஞ்சாயத்து களின் ரிஜிஸ்த்ரார்-ஜெனரலாகவும், மே. த. கவர்னரின் ஆலோசனையாள ராகவும் அவர் பஞ்சாயத்து விஷயங்களிலும், கிராம மக்கள் விஷயங்களி லும் அதிக சிரத்தை காட்டி வந்தார். பஞ்சாயத்து மசோதா செலக்ட்டு கமிட்டி அக்கிராசனராக அவர் பஞ்சாயத்துகளின் தேவைகளை மிகவும் அனுசரணையாக அறிந்து தன் அனுதாபத்தைக் காட்டினார். அவர் போகு முன் அவர் எடுத்த முயற்சியின் பலனைக் காண ஆவலாக இருந்தோம். மாகாண பஞ்சாயத்து சங்கமானது அவர் காட்டிய மரியாதைக்கும், அவர் தன் யோசனைகளுக்கு அளித்த மதிப்பிற்கும், அவருக்கு மிக்க வந்தன

முள்ளதாக இருக்கிறது. நாம் ஒரு உயர்ந்த உத்தியோகஸ்தரை இழக்கிறோம். ஆனால் ஒரு மேன்மையான பதவிக்குப்போகிறார் என்று சந்தோஷமடைகிறோம். எல்லாம் வல்ல இறைவன் அவருக்கு தீர்க்க ஆயுளும் நல்ல வாழ்வும் அருள் புரிவானாக!

கிராம நன்மைக்காக ஐக்கிய சங்கம்.

ஜனவரி மாதம் 11ம் தேதி தஞ்சாவூரில் நடந்த கிராம உத்தியோகஸ்தர்கள் மகாநாட்டை திறந்துவைக்கும்போது, மே. த. கவர்னரின் ஆலோசனையாளரான டி. ஆஸ்டின் துரையவர்கள் நம் தேசத்து பொதுவான கிராம வாழ்க்கையைக் குறித்து சில பொருத்தமான வார்த்தைகள் சொன்னார். தேச சரித்திரத்தை எடுத்துக்காட்டி, "ஒரு சரித்திராசிரியர் நம் தேசத்து கிராம சமூகமானது சுமார் 3000 ஆண்டுகளுக்கு மேலாக உன்றியிருக்கும் ஸ்தல சுயாட்சி அனுபவத்தை காட்டி, அதுதான் இந்திய சமூக வாழ்வில் அழியாமலும், தொடர்ச்சியாகவும் இருந்து வரும் ஆட்சி முறை என்று சொல்லியிருக்கிறார். சாம்ராஜ்யங்கள் ஏற்பட்டு, நம் தேசம் பூராவும் வியாபித்து ஆட்சியை நடத்திவர பலமான மத்திய அரசாங்கம் ஏற்படுமுன், கிராமங்கள், அல்லது சில கிராமக் கூட்டங்கள் தங்கள் ஆட்சியை தாங்களே நடத்தி வந்தன. மத்திய அரசாங்கம், மாகாண அரசாங்கம், என்ற வித்தியாசம் கிடையாது. கிராமக் கூட்டங்கள்தான் எல்லா வேலைகளையும் கவனித்து வந்தன" என்று சொன்னார்.

ஸ்திரமான மத்திய அரசாங்கம் ஏற்பட்ட பின் பொது கிராம சமூகத்தினுடைய ஆட்சி குறைவுப்பட ஆரம்பித்தது, என்று தெரிவித்தார். அநேக கிராமங்களில் பொது சுகாதாரம், ஆரோக்கிய நிலைமை, கல்வி முதலிய விஷயங்களில் விருத்தி ஏற்படாமல் அசட்டை செய்யப்பட்டதைக் குறித்து வருந்தினார். பொது சுகாதார இலாகாவினுடைய உதவி, ஒத்துழைப்புடன், கிராம உத்தியோகஸ்தர்களும், பஞ்சாயத்துகளும், மலேரியா ஜுரம், வாந்தி பேதி முதலிய நோய்களை தடுக்க முடியும் என்று குறிப்பிட்டார். ஐக்கிய சங்கத்தைவிட மேன்மையாக உபயோக முள்ளது வேறொன்றுமில்லை என்று சொன்னார். நாமும் இதை ஆமோதிக்கிறோம். ஆனால் உயர்ந்த பதவி வகிக்கும் ஆஸ்டின் துரையவர்களை போலுள்ளவர்கள் கிராமங்களில் எப்படி ஐக்கியத்தை யுண்டுபண்ணலாம் என்பதைப்பற்றி சிந்தனை செய்ய வேண்டுமென்று விரும்புகிறோம். கிராம உத்தியோகஸ்தர்கள் ரெவினியூ இலாகாவிற்கு கீழ்ப்படிந்து வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு வேலை கொஞ்சம் அதிகம்தான். பஞ்சாயத்தானது கிராம உத்தியோகஸ்தர்களையாவது, பொது சுகாதார இலாகா உத்தியோகஸ்தர்களையாவது ஒத்துழைக்க நிர்பந்திக்க அதிகாரமில்லாத ஒரு சட்ட ஸ்தாபனம்—பொது சுகாதார இலாகாவின் வேலை அதனால் சமாளிக்கக்கூடாத மிகவும் பிரும்மாண்டமானது, திரவிய பலம் தனக்கென்று இல்லாதது. ஆனால் காரியக்

தில் உபயோகப்படாத அதிகாரம் அதற்கு பொது அதிகார சட்டத்தின்படி கொடுக்கப்பட்டிருக்கிறது. கிராம சமூகத்தால் நடத்தப்பட்டு வந்த ஆட்சி முறை, அதனின்றும் வெகுதூரம் விலகியிருக்கும் மத்திய அரசாங்கத்தினிடம் சேர்ந்து, கடைசியில் ஒரு மூட்டுக்கட்டையில் கொண்டுவந்து விட்டது. இதையறிந்து பல வருஷங்களாக மத்திய அதிகாரத்தை மறுபடி பரவி அடியிலிருக்கும் ஸ்தாபனங்கள் இடம் ஒப்படைக்க வேண்டும் என்று கோறப்பட்டது. அதனால்தான் மறைந்துபோன பஞ்சாயத்துகள் புதுப்பிக்கப்பட்டன. ஸ்தாபனம் புற்றுயிர் பெற்றதேயொழிய அதன் அதிகாரங்களாவது கடமைகளாவது திரும்பிக் கொடுக்கப்படவில்லை. அதில்தான் அதன் ஊனம் இருக்கிறது தற்சமயம்.

"கவர்மெண்டானது பல துறைகளில் கிராம கூட்டங்களால் நடத்தப்பட்டுவந்த அதிகாரங்களைத்தான் ஸ்வீகாரம் செய்துகொண்டுவிட்டதால், நம் தேசத்தில் பல பாகங்களிலிருக்கும் கிராமத்தார்களின் நிலைமை மிக்க பரிதாபகரமாக இருக்கிறது, கிராம ஜனங்களிடம் அதிக அதிகாரம் ஒப்படைத்தாலல்லாது, விமோசனம் கிடையாது," என்று மகாநாட்டிற்கு தலைமை வகித்த ஸ்ரீ. டி. ஏ. ராமலிங்கம் செட்டியார் சொன்னார். கிராமாபிவிருத்தியில் அக்கரைகொண்ட ஒவ்வொருவரும் இதைத்தான் கோருகிறார்கள். மே. த. கவர்னரின் மற்றொரு ஆலோசனையாளரான டி. ஜீ. ரூதர்போர்டு துரையவர்கள் தயாரித்த கிராம பஞ்சாயத்து மசோதாவும் இதில் கொஞ்சமாவது ஏற்பட வழிகாட்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது. "இந்த சட்டம் சீக்கிரம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டால், கிராமங்களின் வாழ்க்கை சீர்படும்" என்று இதை எதிர்பார்த்துதான் ராமலிங்கம் செட்டியாரும் பிரஸ்தாபித்தார். ஆனால் இந்த சட்டம் எப்போது அமுலுக்கு வரும் என்று இன்னும் தெரியவில்லை. டி. ஆஸ்டின் துரையவர்களை அங்கத்தினராகக்கொண்ட கவர்மெண்டார் இது சட்டமாவதை துரிதப்படுத்துவார்கள் என நம்புகிறோம். சட்டம் செய்தால் மட்டும் போதாது. கிராம போதகர்கள் (Rural Guides) என்று சில பேர்களை பயிர்ச்சி செய்து பஞ்சாயத்து கூட்டுக் கமிட்டிகளின் உத்தியோகஸ்தர்களாக அவர்களை வேலைசெய்யச் சொல்லவேண்டும் என்று நாம் வெகு நாளாக கேட்டுக்கொண்டிருக்கிறோம். பஞ்சாயத்துகளுக்கு சகாயமாக இந்த ஆட்கள் இருக்கவேண்டும். இவர்களை பொறுக்கி, தேர்ச்சி யளித்து, அவர்களுக்கும் பஞ்சாயத்துக்களுக்கும் ஒத்துழைப்பு ஏற்படும்படி செய்து கவர்மெண்டார் சகாயம் செய்யலாம். கிராம வேலைகள் விஷயமாக, கவர்மெண்டு இலாகாக்களுக்குள் ஒத்துழைப்பு இல்லாததைப்பற்றி நாம் அடிக்கடி குறிப்பிட்டிருக்கிறோம்.

இது விஷயமாக செய்யவேண்டியது இருக்கிறதென்று, கவர்மெண்டார் பூந்தமல்லி சுகாதார திட்டம்போல் திட்டம் ஆரம்பித்து, பிரத்தியேக பல இலாகா உத்தியோகஸ்தர்களை ஒன்றாக வேலைசெய்யும்படி ஏற்பாடு செய்திருப்பதிலிருந்து, ஒப்புக்கொள்ளுகிறார்கள் என ஊகிக்கலாம். பஞ்சாய

மகாணம், கொச்சி சமஸ்தானம் முதலியவைகளில் கிராமாபிவிருத்தி இலாகாக்கள் தனியாக இருக்கின்றன. நம் மாகாணத்திலும் பஞ்சாயத்துகளை ஒரு பிரத்தியேக மாகாண உத்தியோகஸ்தரிடம் ஒப்படைக்கவேண்டும். அ. து. பஞ்சாயத்துகளின் ரிஜிஸ்த்ரார்-ஜெனரல் என்ற உத்தியோகஸ்தரை மறுபடியும் நியமித்து, பஞ்சாயத்து இலாகாவிற்கு தலைமையாய் இருப்பதோடுகூட மற்ற பிரதேசங்களில் கிராம புனருத்தாரண வேலைகளையும் கவனிக்கும்படி செய்து படிப்படியாக மாகாண முழுவதும் பஞ்சாயத்து ஆட்சியை ஏற்படுத்த பரவும்படி செய்யவேண்டும். எங்கெங்கு ஒரு வேலை திட்டத்தை அமுல் நடத்த வேண்டியிருக்கிறதோ, அங்கெல்லாம் அவர் ஒரு பஞ்சாயத்து ஏற்பாடாகும்படி கவனிக்கவேண்டும். இதோடுகூட அவர் தன் அந்தஸ்தினால், எல்லா கவர்மெண்டு இலாகாக்களையும் ஒன்றுகூடி ஒத்துழைத்து கிராம நிவாரண வேலை சரிவர கவனிக்கும்படி செய்ய நல்ல சந்தர்பம் கிடைக்கும். தற்சமயம் செய்யப்படுவது போல் கிராமாபிவிருத்தி வேலையை கலெக்டர்கள் மூலம் நடத்துவது திருப்திகரமாக இல்லை. அது என்ன சிறிய திட்டம் தயார் செய்யப்பட்டாலும், அந்தந்த ஸ்தல ஜனங்களின் முயற்சியை அடக்கிவிடுகிறது. ஏற்கனவே அதிக வேலைகளை கவனிக்க வேண்டியிருக்கும் ரெவினியூ இலாகா அதிகாரிகளுக்கு மேலும் பளுவையுண்டாக்கி மிக்க தாமதம் ஏற்பட காரணமாகிறது. ஒரு கிராமத்தில் தர்ம சிந்தனையுள்ள ஒரு கனவான் கொஞ்சம் சகாயம் செய்து ஆரம்பிக்கப்பட்ட கிணறு வெட்டும் வேலை நான்கு வருஷங்களாகியும் இன்னும் பூர்த்தியாகாமலிருப்பது எங்களுக்குத் தெரியும். இதேமாதிரி வேலையை ரிஜிஸ்த்ரார்-ஜெனரலின் கவனத்தின் கீழ் இருக்கும் ஒரு பஞ்சாயத்தினிடம் ஒப்படைத்தால், இந்த தாமதம் ஏற்பட்டிருக்காது என்பது நிச்சயம். மேலும் பஞ்சாயத்துகள் விருத்திக்காக ஒரு மாகாண உத்தியோகஸ்தர், கிராமங்களின் தேவைகளின் தாரதம்யத்தை நன்கு உணர்ந்து, திரவிய சம்பந்தமாகவோ, மற்ற விஷயமாகவோ சகாயம் செய்யும்படி கவர்மெண்டுக்கு ஆலோசனை கூறுவார்.

ரஸ்தாக்கள், சாலைகள், வண்டிபோகும் சாலைகள், நடைபாதைகள் முதலியவைகளின் சீர்திருத்தமும், பராமரிப்பும்.

ஷை சாலைகளை சீர்படுத்துமுன் பொரம்போக்குகளை பஞ்சாயத்துகள் கவர்மெண்டிடமிருந்து மாற்றிக்கொள்ளவேண்டும் என்று நிர்பந்திப்பதால் ஏற்படும் கஷ்டங்களைக் குறித்து இந்த இதழ்களில் பல தடவை பிரஸ்தாபித்திருக்கிறோம். இது விஷயமாக கவர்மெண்டார் நம் கோறிக்கைக்கு இணங்கி, பஞ்சாயத்து எல்லை வெளியில் இருக்கும் சாலைகள், வீதிகள், வண்டி பாதைகள், நடைபாதைகள் முதலியவைகளை கூட கவர்மெண்டு மாற்றுதலன்னியே சீர்படுத்தலாம் என்று ஸ்தல ஸ்தாபன இன்ஸ்பெக்டர் சுற்றறிக்கை 708, 716-இல் உத்திரவிட்டிருப்பதைப்பற்றி சந்தோஷமடைகிறோம். இந்த அதிகாரம் கொடுப்பதை கலெக்டர்களிடம் விட்டுவிட்

டிருக்கிறது. நடைபாதைகளை பஞ்சாயத்துக்கு சக்தி இருந்து பொது ஜனங்களின் நன்மைக்கு அவசியமாயிருந்தால் சீர்படுத்தவும், பராமரிக்கவும் செய்யலாம். கலெக்டர்களின் முன் அனுமதியை பஞ்சாயத்து பிரசிடெண்டுகள் பெற்று, பிறகு கவர்மெண்டுக்கு மான்யத்திற்கு மனு சமர்ப்பிக்கவேண்டும். ஷெடி ஸ்தலங்களை முற்றிலும் பஞ்சாயத்துகளிடமே ஒப்படைப்பதைப்போல், இந்த ஏற்பாடு அவ்வளவு திருப்திகரமானதல்ல. ஆனால் முன்பு இருந்ததைவிட இது கொஞ்சம் அனுகூலம்தான். கலெக்டர்கள் தங்களுக்கும் மிக அதிகமான பொறுப்புகளுடன், கிராம ஜனங்களின் நன்மை, சுபிக்ஷம் கலை, கல்வி முதலியன அவர்களுக்கு மற்ற இடங்களுக்கு சௌகர்யமாக போய்வர போக்கு வரத்துகள் இருந்தால்தான் முடியும் என்பதை ஞாபகத்தில் வைத்து, செய்யும் உதவியை துரிதமாக அனுமதிப்பார்கள் என நம்புகிறோம்.

குடிகள் தங்கள் சொந்த உபயோகத்திற்கு தான்யங்களை வைத்துக் கொள்ள வேண்டும்.

நம் தேசத்து குடியானவன் மிகவும் ஏழையாக இருப்பதால் தன் நிர்பந்தத்தின் பொருட்டு அறுவடையாகும் மாஜூலை, தன் எதிர்கால தேவையை கவனிக்காமல் விற்றுவிடுகிறான். உணவை உற்பத்தி செய்பவன் அதை விற்றுவிட்டு பின்னிட்டு தன் தேவைக்கே நஷ்டத்தில் வாங்க வேண்டி வருவது மிகவும் பரிதாபமானது. ஆனால் ஆகாரப் பொருள்களுக்கு பஞ்சம் ஏற்பட்டிருக்கும் இந்த காலத்தில் அது தற்கொலை செய்துக் கொள்ளுவது போலாகும். ஆகையால் கிராம குடிகளின் நன்மைக்காக பாடுபடும் பஞ்சாயத்துகள் குடிகளிடம் தங்களுக்கு அடுத்த அறுவடை காலம் வரை வரும்படியான தான்யங்களை நிறுத்தி வைத்துக்கொள்ள வேண்டுமென்று பிரசாரம் செய்யவேண்டும். மற்ற நிர்பந்தங்கள் என்னவிருந்தாலும் கவனிக்கக்கூடாது. பஞ்சாயத்துகளும், பிரசிடெண்டுகளும் இதைக் கவனித்து, நடவடிக்கைகள் எடுத்துகொள்ளுவார்கள் என நம்புகிறோம்.

வைக்கோல் கூழிலிருந்து காகிதம்.

அடியில் கண்ட கட்டுரையானது, திருச்செங்கோடு காந்தி ஆச்ரமத்தார், கிராமதொழிலாக காகிதம் தயாரித்தல் என்று வெளியிட்டிருக்கும் சிறு புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டிருக்கிறது. அது வைக்கோல், பழைய காகிதம், இவைகளால் கையால் தயாரிக்கப்பட்ட காகிதத்தில் அச்சடிக்கப்பட்டிருக்கிறது. விலை பிரதி ஒன்று ஒரு அணா, தபால் செலவு மேலும் 9 பை.

முகவுரை

தற்சமயம் கிராமங்களில் கையால் தயார் செய்யப்படும் காகிதத்தைப்பற்றி விவரங்கள் அறிய விருப்பம் மிகவும் ஏற்பட்டிருப்பதால், இந்த பிரசுரம் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. கிராமங்களில் காகிதம் தயார் செய்ய விரும்புவோருக்குத் தெரிய வேண்டிய அடிப்படையான விவரங்கள் மட்டுமே கொடுக்கப்பட்டிருக்கின்றன. விஞ்ஞான விவரங்களாவது சாதன விவரங்களாவது பூரணமாக கொடுக்கப்படவில்லை.

ஒவ்வொரு தாவரத்திலும், செலுலோஸ் (Cellulose) என்று சொல்லப்படும் காகிதம் செய்ய ஏற்றதான ஒரு வித நார் இருக்கிறது. அந்த நாரை தனியாக தாவரத்திலிருந்து பிரித்து, செலுலோஸை ஒன்றாக சேர்த்து காகிதந்தான் செய்யப்படுகிறது.

நார் சம்பந்தப்பட்ட வஸ்து கிடைப்பவைகளிலிருந்தெல்லாம் காகிதம் தயார் செய்ய முடியுமாயினும், அது எவ்வளவு கிடைக்கும், என்ன செலவாகும், அதை பதம் செய்யும் சௌகர்யங்கள், கூழ் எவ்வளவு எடுக்கலாம், முதலிய விஷயங்களை பொருத்திருக்கிறது. அதற்கு தேவையான சில பொருள்களாவன: நெல் வைக்கோல், காட்டுப் புல், மூங்கில், உபயோகப்படுத்தப்பட்ட கயிறு அல்லது சணலால் செய்யப்பட்ட நார் வஸ்துக்கள், பழைய கோணிப் பைகள் அல்லது நூல் பைகள், சில மிருதுவான மரங்கள், பழைய அச்சான காகித துண்டுகள். ஆனால் பழை காகித துண்டுகள் அவ்வளவு சிலாக்கியமல்ல. ஏனெனில் பழைய காகிதத்தையே மறுபடியும் புது காகிதம் செய்ய உபயோகித்தால், நன்றாக செய்ய முடிவதில்லை, அச்சுமையுடன் இருக்கும் கிழிந்த காகிதம் உபயோகப்படாது. ஆனால் அவைகளிலிருந்து அட்டைகள் தயார் செய்யலாம். ஒவ்வொரு நாரிலும் செலுலோஸ், செலுலோஸ் அல்லாதது ஆகிய இருவகை வஸ்துக்கள் கலந்திருக்கும். செலுலோஸ் அல்லாத வஸ்துவை தனியாக பிரிப்பது அந்த தாவரத்தின் தன்மையை பொறுத்தது. சதை எனப்படும் செலுலோஸ் வஸ்து தனியாக எடுக்கப்பட்டு விட்டால், மற்றதான் செய்வது, தயாரிப்பது, எல்லாம் எல்லா மூலப் பொருள்களுக்கும் ஒரேவிதமானதுதான்.

கூழ் செய்வது

இப்போது கூழ் எப்படி செய்யப்படுகிறது என்பதையபற்றி கவனிப்போம். சுமார் 50 பவுண்டு எடையுள்ள நெல் வைக்கோல் எடுத்துக்கொள்ளுவோம். அதை ஒரு கஜ நீளம் உள்ள சுமைகளாகச் செய்வோம். அதிலிருந்து ஒருபிடி வைக்கோலை யெடுத்து, கெட்டியாக கையில் பிடித்து, ஒரு அரிவாளால் ஒரு அங்குல துண்டுகளாக வெட்டவேண்டும். இதுமாதிரி, அந்த எல்லா வைக்கோலையும் ஒரு மிருதுவான மரப்பலகையில் வெட்டவேண்டும். வெட்டின எல்லா துண்டுகளையும் ஒரு இரும்பு பீப்பாயில் போட்டு, அதில் இந்த துண்டுகள் அமுக்கும்படியாக தேவையான தண்ணீர் சேர்க்கவேண்டும். அதில் 8 சத விகிதம், அ. து. 4 பவுண்டு காஸ்டிக் சோடா உப்பை கொஞ்சம் தண்ணீரில் கலந்து, இந்த பீப்பாயில் ஊற்றி, அதை 3, 4 மணி நேசகாலம் நன்றாக காய்ச்சவேண்டும். நடுநடுவே மேல் பாகம் வரண்டுபோகாமல் இருக்க, தண்ணீர் சேர்த்துக்கொள்ளவேண்டும். பிறகு அதை வடிகட்டி, மறுபடியும் போதுமான தண்ணீரை சேர்த்து, களறி, பின்பு ஒரு துணியில், வஸ்து ஒன்றும் ஜலத்துடன் வெளியில் வந்துவிடாதபடி, வடிகட்ட வேண்டும். இப்படி ஒரு தரம், இரண்டுதரம் செய்வதால் க்ஷாரசம்பந்தமான செலுலோஸ் அல்லாத வஸ்து கொஞ்சம் விலகிவிடும். பிறகு 4 பவுண்டு காஸ்டிக் சோடா உப்பை ஜலத்தில் கரைத்து, அதில் சேர்த்து, மேலும் போதுமான தண்ணீர் ஊற்றி, மறுபடியும் நன்றாக 3, 4 மணி நேரம் காய்ச்சவேண்டும். இப்போது காய்ச்சினது போதுமானது. பிறகு கொஞ்சம் கழுவி, அதை நன்றாக காலால் மிதிக்கவேண்டும். அது மிருதுவாகவும், காகிதம் செய்யக்கூடிய நார்கள் தனியாக வரும் வரை மிதிக்கப்படவேண்டும். அப்படி மிதிப்பது ஒரு சிமிடியினால் கட்டப்பட்ட $1\frac{1}{2}$ அடி ஆழம் மேல் பாகம் $2\frac{1}{2}$ அடி சுற்றளவுள்ளதும், அடியில் வட்டமானதுமான ஒரு பள்ளத்தில் மிதித்தால் சௌகர்யமாக இருக்கும். உள்பக்கம் சுரசுரப்பாக இருக்கவேண்டும். கூழ் தயாராகிவிட்டதா என்று தெரிந்து கொள்ள, அதில் சுமார் ஒரு தோலா எடை ஒரு வெள்ளை புட்டியில் போட்டு, அதில் முக்காலுக்கு தண்ணீர் ஊற்றி நன்றாக குலுக்கவேண்டும். நார்கள் ஒரேமாதிரி தென்பட்டால், மிதித்ததுபோதும். ஒவ்வொரு நாரும் சுத்தமாகவும் பூரணமாகவும் தனித்திருக்கவேண்டும். கூழில், அடிபடாத முடிச்சுகள் இருக்கக்கூடாது. கூழில் தண்ணீர் கலந்தால், மெல்லிய பஞ்சைமாதிரி இருக்கவேண்டும்.

பிறகு அதை 90 அங்குல நீளம், 54 அங்குல அகலமுள்ள ஒரு துணியில் போட்டு, அதன்மேல் தண்ணீர் தொட்டி கழுவவேண்டும் இப்போது எல்லா க்ஷார சம்பந்தமான வஸ்துக்களும் அடித்துக்கொண்டு போகப்பட்டிருக்கும். இப்போது தான் எடுக்க தயாராக இருக்கும்.

வெளுப்பது

தாள்களை வெண்மையாக்க, இந்த கூழை வெளுக்கவேண்டும். கூழை ஒரு பெரிய பீப்பாயில் போடு, போதுமான தண்ணீர் சேர்த்து நன்றாக களறு. ஒரு வாளியில் 5 சத விகிதம், அ. து. 5 பவுண்டு வெளுக்கும் பொடியை போட்டு, தண்ணீர் கலந்து அதை வண்டலை இறுத்த ஒரு துணிவழியாக அந்த பீப்பாய்க்குள் கொட்டு. அந்த பீப்பாய் தண்ணீரை மணிக்கொருதரம் களறு, 3 மணி நேரத்தில் அது வெளுத்திருக்கும்.

அதை ஒரு துணியில் அதிக தண்ணீர்போட்டு கழுவு. இதனால் எல்லா கூழும் வெளுத்துவிடும். நன்றாக கவனித்து கழுவவேண்டும். கூழை நுகர்ந்து பார்த்தால் கூட இது தெரியும். இப்போது தான் எடுக்க தயாராகிவிட்டது.

தாளெடுப்பது

இந்த கூழானது முதல் உபயோகித்த வஸ்துவில் 40 சத விகிதம் கனம் இருக்கும். தாளெடுக்க ஒரு மரத்தொட்டியோ, சிமிட்டி தொட்டியோ, அல்லது செரிவு பக்கங்கள் கொண்ட ஒரு துத்தநாக தொட்டியோ தேவை. அந்த தொட்டியின் மேல் பாகம் 4½ அடி சதுரமாகவும், அடிபாகம் 2¾ அடி சதுரமாகவும், உயரம் 3 அடியும் இருக்கவேண்டும். இந்த தொட்டியில் முக்காலுக்கு சுத்தமான மிருதுவான தண்ணீரை ரொப்பவேண்டும். இதில் கொஞ்சம் தண்ணீரை ஒரு வாளியில் எடுத்து, அதில் கொஞ்சம் கூழை கலந்து, நன்றாக களறி, அதை பெரிய தொட்டியில் கொட்டவேண்டும். இம்மாதிரி அந்த தொட்டியிலிருக்கும் கூழ் எல்லாவற்றையும் கலந்து, 4 அடி நீளம், ஒரு அடி சுற்றளவுள்ள ஒரு மூங்கில் கொம்பினால், அதை பலமாக சுமார் 2 மணி நேரம் களறவேண்டும். களறும்போது கூழ் வெளியில் தெளிக்காதபடி செய்யவேண்டும். சரியாக களறினால், நார்கள் தனித்து, மிருதுவாகவும், பளபளப்பாகவும் ஆகும். இதனால் உயர்தரமான ஒரேமாதிரி காகிதம் செய்யலாம். பின்பு, அந்த தொட்டியிலிருக்கும் கூழை அப்படியே படியும்படி விட்டுவிடவேண்டும். மேல்பாகத்திலிருக்கும் தண்ணீரை மெதுவாக 18 அடி நீளம் 1½ அடி அகலம், 1½ அடி கனமுள்ள ஒரு கழியினால் தள்ளவேண்டும். இதனால் அடியில் கூழ் சமமாக படிய அனுகூலமாக இருக்கும்.

தூக்குவதற்கு ஒரு பாய் தேவை. இது புல்காம்பினால் செய்யப்படுகிறது. தாழ்வாரங்களுக்கு மூங்கில் கொம்பினால் தட்டிகள் செய்வதுபோல, அந்த நாணலை கட்ட, கயிறுக்குப்பதில் குதிரை மயிர் உபயோகிக்கவேண்டும். ஒரு நாணலுக்கும் மற்றொன்றுக்கும் ஒரு அங்குலத்தில் 20ல் 1 பாகம் இருக்கவேண்டும். ஒரு குதிரை மயிர் வரிசைக்கும் மற்றொன்றுக்கும் 1½ அங்குல தூரம் இருக்கவேண்டும். இந்த மாதிரி ஒரே மாதிரி நாணலைக்கொண்டு 33 அடி நீளம், 26 அடி அகலம் கொண்ட ஒரு பாய் தயார் செய்யவேண்டும். 33 அடி இருமுனையிலும் 1½ அடி கனமுள்ள 2 மர உருளைகளை கட்டவேண்டும். மேலே சொன்ன அளவுள்ள தொட்டியிலிருந்து இந்த பாயினால் இரட்டை பூல்ஸ்காப் (Double Foolscap) அளவு காகிதம் எடுக்கலாம். இந்த பாயை 33 அடி நீளம், 26 அடி அகலமுள்ள நீண்ட சதுரமானதும், 8, முதல் 10 வரையில் கூர்மையான கம்பிகள் ஜன்னல் கம்பிகளைப்போல் பாயை மத்தியில் தாங்கிக்கொள்ள, சொருகப்பட்டதுமான மரப்பலகையின்மேல் பறப்பவேண்டும். கம்பிகள் ஒரு வரிசையாக இருக்கவேண்டும். பாயின் பக்க ஓரங்களை 25 அடி நீளம், 1½ அடி அகலம், ¾ அடி கனம் கொண்ட இரண்டு வலிச்சல்கள் தாங்கி நிற்கவேண்டும்.

பாய்களை ஒரு அங்குலத்திற்கு 20 வரிசையுள்ள மெல்லிய கம்பியாலும் செய்யலாம். இந்த 33 அடி நீளம், 26 அடி அகலம் மெல்லிய கம்பிபாயை ¾ அடி கனமுள்ள வலிச்சல்களால் செய்யப்பட்ட நீண்ட சதுரமான மரப்பலகையில் பரப்பவேண்டும். அந்த கம்பியும், பலகையும் கெட்டியாகவும் ஒரே படிமானமாக பிடித்துக்கொள்ள வேண்டும். மெல்லிய கம்பிக்கடியில், கம்பியை தொடும்படியாக சமதூரத்தில் கூர்மையான முனையுள்ள மரக்கால்களை பலகையில் வரிசையாக, பிணைக்கவேண்

டும். கம்பியில்லாமல் அதே அளவுக்கு ஒரு பலகை தயார் செய்து அதை அந்த கம்பிபாயின்மேல் வைக்கவேண்டும். அது தாக்கும் பாயாக உதவும். வெளியில் இருக்கும் அத்து, கூழை வெளியில் போகாமல் தடுக்கிறது.

பக்க வலிச்சல்களையும், பலகையையும் இரண்டுகைகளாலும் பிடித்து, பாயின் பாதியை செங்குத்தாக, இலேச கலக்கப்பட்ட தொட்டியில் தோய்க்கவேண்டும். வெளியில் எடுக்கும் பூமிக்கு சமவாக்காக, இலேசாக இரண்டு பக்கமும் குலுக்கி எடுக்கவேண்டும். வேகமாக கலக்கினாலும், அசைத்தாலும், தாளின் ஒரேமாதிரி பதத்தை கெடுத்துவிடும். அந்த பாயிலிருக்கும் தண்ணீர் வடிந்தவுடன் அதில் ஒரு மெல்லிய ஈரமான நார்வரிசை படர்ந்திருக்கும். பக்க அடைப்புகளை எடுத்து விட்டு, ஒரு ஈரமுள்ள சிறிய துண்டை அந்த ஈரமான காகிதத்தாள்மீது பரப்பி அந்த பாயை துணிகீழ் படியும்படி ஒரு பலகைமேல் வைக்கவேண்டும். பிறகு மெதுவாக, ஈரமான தாளை அசைக்காமல் பாயை எடுக்கவேண்டும்.

இந்த மாதிரி ஒவ்வொருதாளுக்கும் ஒரு துண்டை உபயோகப்படுத்தி, ஒன்றின்மேல் மற்றொன்றை அடுக்கி, 9 அடி உயரம் வரைக்கும் அடுக்கவேண்டும். அப்படியே ஒருமணி நேரம் விட்டுவைக்கவேண்டும். இதற்கு காகிதத்திலிருக்கும் ஈரமெல்லாம் அநேகமாக வடிந்திருக்கும். பின்பு மற்றொரு பலகையை அந்த அடுக்கின்மேல் வைத்து முதலில் மெதுவாகவும் பின்பு கொஞ்சம் கொஞ்சமாக அதிகமாகவும் அழுத்தவேண்டும். இதனால் இன்னும் அதிக தண்ணீர் வடிந்து போகும். இப்போது அதை உலர்த்தவேண்டும். ஒவ்வொரு துண்டையும் ஒவ்வொன்றாக இரண்டு ஓரத்திலும் பிடித்து எடுத்துவிடவேண்டும். ஒவ்வொரு துண்டுடன் ஒரு ஈர காகிதத்தாள் வரும். காகிதம் இருக்கும் பக்கத்தை சமமான சுவரில் ஒட்டி, துண்டின்மேல் மடிப்பு இல்லாமல் தடவவேண்டும் துண்டிலிருக்கும் காகிதம் சுவரில் ஒட்டிக்கொள்ளும். இப்படி எல்லாவற்றையும் செய்ய வேண்டும். துண்டு பாதி உலர்ந்திருந்தாலும் அதை எடுத்துவிடலாம். ஆனால் காகிதம் மாத்திரம் நன்றாக உலர்ந்தபின்புதான் எடுக்கப்படவேண்டும். கயறிலாவது, பெரம்பிலாவது, துத்துநாக கம்பிகளிலாவது உலர்த்தலாம். தாளை துண்டிலிருந்து பிரிக்கும்போது, தாள் கிழியாமல் ஜாக்கிரதையாக எடுக்கவேண்டும். இப்படி எடுக்கப்பட்ட காகிதத்தில் தொண்டிகள் இருக்குமாதலால் மை ஊறும். அந்த தொண்டிகளை அடைப்பது சைசிங் (Sizing) என்றுசொல்லப்படும்.

சைசிங் என்பது மூன்று வகைப்படும். (1) வச்சிரப் பசை சைசிங் (Glue Sizing). (2) இன்ஜின் சைசிங், (3) பசைமா சைசிங் (Starch Sizing) என்பன.

வச்சிரப் பசை சைசிங்கிற்கு (Glue Sizing) தண்ணீரில் பசையை இலேசாக கலந்துக் கொள்ளவேண்டும். 100 தோலா காகிதம் 'சைஸ்' செய்ய வேண்டுமானால் 400 தோலா தண்ணீர் எடுத்துக்கொண்டு, அதை கொதிக்கவைத்து, அது கொதிக்கும் போது $2\frac{1}{2}$, 3 தோலா பொடி வச்சிரப் பசையையும் 5 தோலா படிகாரத்தால் கலந்த தண்ணீரையும் சேர்க்கவேண்டும். பிறகு இலேசாக எரியும் அடுப்பில் சுமார் ஒரு மணி நேரம் காய்ச்சி, மெதுவாக களறிக்கொண்டிருக்க வேண்டும். அதை ஒரு மரசட்டத்தில் போட்டு, ஆறினவுடன், காகித தாளை ஒவ்வொன்றாக அதில் தோய்த்து அடுக்கவேண்டும். பிறகு அதை ஒரு பலகையினால்

அமுக்க வேண்டும். ஒவ்வொரு தாளையும் எடுத்து, கயிறில் உலர்த்த வேண்டும். இப்படி செய்தால் காகிதம் அதிக நாட்கள் தாங்கும். ஆனால் அந்த தண்ணீரில் சாமான்கள் பக்குவமாக கலக்கப் பட்டிருப்பதையும், பின்பு அவை நன்றாக உலர்ந்திருப்பதையும் ஜாக்கிரதையாக கவனிக்கவேண்டும்.

இரண்டாவது முறையில், நார்களில் அலுமினியம் குங்கிலியம் (Aluminium Rosinate) என்ற வஸ்துவை கலக்கப்படுகிறது.

தாள் தயாராகும் போது இது செய்யப்படுகிறது. ஒரு அகலமான வாய் கொண்ட இரும்பு பாத்திரத்தில் உலர்ந்த கூழின் அளவில் 10 சத விகிதம் பொடி செய்யப்பட்ட குங்கிலியத்தை (Rosin) போட்டு காய்ச்சவேண்டும். அது உருகும், குங்கிலியத்தின் அளவில் 16 சத விகிதம் வாஷிங்சோடா உப்பை (Washing Soda) தண்ணீரில் கலந்து அதை கொஞ்சங் கொஞ்சமாக இந்த குங்கிலியத்துடன் சேர்க்கவேண்டும். அதிகமாக பொங்கும். ஆகையால் சோடா உப்புத் தண்ணீரை ஜாக்கிரதையாக கலக்கவேண்டும். எல்லாம் கலந்த பிறகு இலேசான அனலில் சுமார் ஒரு மணி நேரம் காய்ச்ச வேண்டும். குங்கிலிய சோப் (Rosin Soap) எனப்படும் ஒரு விதபசை கிடைக்கும். இதை கொஞ்ச நாள் வைத்து உபயோகித்தால் நல்லது. இந்த சோப்பை தண்ணீரில் கரைத்து, ஏற்கனவே நன்றாக கலக்கப்பட்ட தொட்டியிலிருக்கும் கூழுடன் கலக்கவேண்டும். நன்றாக களறி கலக்க வேண்டும். தண்ணீரில் படிகாரத்தை கரைக்கவேண்டும். குங்கிலியத்தின் அளவில் படிகாரம் 4 மடங்கு அதிகமாக இருக்கவேண்டும். இந்த படிகாரத்தண்ணீரை தொட்டியில் நன்றாக களறிக் கொண்டு கொட்டவேண்டும். படிகாரம், அலுமினியம் ரோசினேட் (Aluminium Rosinate) என்பதை அப்புறப்படுத்தும். அப்படி நன்றாக ஆகும் வரையில் படிகாரத் தண்ணீரை கலக்கவேண்டும்.

இது கண்டு பிடிக்க, தொட்டியிலிருந்து கூழை கொஞ்சம் எடுத்து வடிகட்டினால், சுத்தமானதாக இருந்தால் அதில் சோப்பாவது படிகாரமாவது அதிகமாக இருக்கும். வடிகட்டினதில் கொஞ்சம் படிகாரதண்ணீரை கலந்தால் அப்போது பொங்கினால் இன்னும் அதிக படிகாரம் தொட்டியில் கலக்கவேண்டும் என்று தெரிந்துக்கொள்ளலாம் சோப் அதிகமாக இருப்பது, சாதாரண சோப் தண்ணீரில், வடிகட்டின தண்ணீர் பட்டவுடன் தயிர் மாதிரி மாறினால், கண்டு கொள்ளலாம். இந்த மாதிரி பார்த்துக் கொள்ள வேண்டும். படிகாரத்தை மிகவும் அதிகமாக உபயோகிக்கக்கூடாது. அது காலாவட்டத்தில் காகிதத்தின் வலுவை பலஹீனப் படுத்துகிறது,

5 பவுண்டு மைதா மாவு கலந்த தண்ணீரை ஒரே சூடு உண்டாகும்படி காய்ச்ச வேண்டும். அது கொஞ்சம் கெட்டியாகும் சமயம் அதோடு கொஞ்சம் நீல நிறம் கொதிக்கும்படியாக தேவையான காபர் சல்பேட் (Copper Sulphate Powder) தூளை கலக்கவேண்டும். இது பூச்சிகள் காகிதத்தை தின்றுவிடாமல் காப்பதற்கு உபயோகப்படும் விஷமாதலால், அதை மிதமாக உபயோகப் படுத்த வேண்டும். இதையும் அந்த தொட்டியில் கலந்து ஒரு மணி நேரம் நன்றாக களற வேண்டும். உலர்ந்த கூழ் அளவிற்கு 10 சத விகிதம் ஓட்டையை அடைக்கும் வஸ்துக்களான சீனு களிமண் (Chenci Clay), ஸோப்பு கல் தூள் (Soap Stone Powder) இவைகளையும் அதில் சேர்க்கலாம்.

ஒரு மணி நேரம் இவை அடங்கி நிற்கும் வரையில் காத்திருந்து, பிறகு தூக்க வேண்டும். இவைகளில் காகிதத்தை சுண்ணும்பு சுவறில் உலர்த்தக் கூடாது. இந்த முறை கொஞ்சம் ஆள் தேவையை மிச்சப்படுத்துவதால், பத்திரம் எழுதும் காகிதம், மிகவும் மெல்லிய காகிதம் இவைகள் தவிற மற்ற எல்லாவித காகிதம் தயார் செய்யவும் இதை அனுசரிக்கலாம்.

மூன்ருவது முறையில், தான் இருபக்கத்திலும் இலேசாக பசைமாவு தடவப் படுகிறது. இது தான் மிகவும் புராதனமுறை. கொஞ்சம் தண்ணீரில் ஒரு படி அரிசியை ஒரு நாள் ஊரவைத்து, நன்ருக சுத்தம் செய்து, நன்ருக பசையாகும்படி அரைக்கவேண்டும். அதில் கொஞ்சம் தண்ணீர் கலந்து, நன்ருக களறி, ஒரு துணி வழியாக இன்னெரு பாத்திரத்தில் கொட்டவேண்டும். எல்லா பசைமாவும் இறங்கும் வரையில் இப்படி அடிக்கடி செய்து, மாவை அடியில் தங்கும் வரை இருக்கவேண்டும். ஒரு மணி நேரத்திற்குப்பின் தெளிவு தண்ணீரை மற்றெரு பாத்திரத்தில் கொட்டவேண்டும். அடியில் இருப்பது வெண்மையான ஈரமுள்ள பசை மாவு. அடுப்பில் ஒரு பாத்திரத்தில் தண்ணீர் சாய்ச்சி, கொதிக்கும் தண்ணீரில் இந்த பசை மாவைக் கொட்டி, கட்டியாக நின்று விடாமலிருக்க நன்ருக களற வேண்டும். கையில் ஒட்டிக் கொள்ளும்படியான ஒரு மெல்லிய பசை செய்து, அதில் 2 தோலா படிகாரத் தூளுடன் 2 தோலா காபர் ஸல்பேட்டை (Copper Sulphate) கலந்து, நன்ருக களறி, அடுப்பிலிருந்து எடுத்து ஆரவைக்கவேண்டும். காகிதத்தின் ஒரு பக்கத்தில் இதை தடவி, அந்த பக்கம் உலர்ந்தவுடன் இன்னெரு பக்கமும் தடவி உலர்த்தவேண்டும். இப்போது காகிதத்தில் மை ஊராது. இப்படியே எல்லாவற்றையும் செய்யவேண்டும். இது, சிரமமான வேலைதான். காகிதம் ஒரே அளவாக இல்லாவிட்டாலும், பளபளப்பாக இருக்கும்.

பளபளப்பு செய்தல்

கடைசியாக காகிதத்தைபேனு தடை படாமல் எழுதும் படி மிருதுவாக்க வேண்டும். காகிதத்தை மிகவும் மிருதுவான மாம்பலகையில் பரப்பி, அதை சலவைக்கல்லினுலாவது, கண்ணடி கட்டியினுலாவது நன்ருக தேய்க்கவேண்டும். இனி காகிதத்தை தேவையான அளவுக்கு கத்தரித்து உபயோகப் படுத்தலாம். கவர்கள், கடிதம் எழுதும் காகிதம், நோட்டு காகிதம், கணக்கு புத்தகங்கள், பிளாடிங் காகிதம், மார் பிள் காகிதம் பெயர் குறிக்கும் அட்டை காகிதம், கார்டு, அட்டை எல்லாம் தயார் செய்யலாம்.

பொதுவாக

100 அடி நீளம், 20 அடி அகலம், 8 அடி உயரம் கொண்ட ஒரு கொட்டாயில், ஓடு மூடினதாக இருந்தால் விசேஷம், 3, 4 அறைகள், சுவர்களெல்லாம் மழ மழ வென்று சிமிட்டி அல்லது சுண்ணும்பினுல் பூசப்பட்டு, நல்ல முறடான சிமிட்டி தரை, சிமிட்டியினுல் செய்யபட்ட கூழை சேகரிக்கவும், தூக்கவும், மிதிக்கவும், ஊரவைக்கவும் உபயோகிக்க 4 முதல் 6 தொட்டிகள், தேவையாக இருக்கும்.

சமீபத்தில் நல்ல தெளிவான, மிறுதுவான தண்ணீர் இருக்கவேண்டும். 100 ரூபாய் ஆரம்பத்தில் செலவு செய்து, தேவையான சாமான்களை, அ. து. தூக்கும் பாய்கள், சட்டங்கள், தொட்டிகள், அடுப்பு (இது உள்ளூர் குயவனிடம் 1 அணு

வுக்கு கிடைக்கும்), துண்டுகள், தூக்கவும் ஓட்டை அடைக்கவும், பளபளப்பாக்கவம் பலகைகள், துணிகள், கிழிந்த கோணி துண்டுகளை கூழாக்க ஒரு உலக்கை, வெட்டும் கத்திரி, கத்தி முதலியன, சேகரித்துக் கொள்ளலாம். இன்னும் ஒரு 50 ரூபாய் செலவு செய்தால், தேவை மூலபொருள்கள், ரசாயன வஸ்துக்கள், விறகு, முதலிய கிடைக்கும். கூலியாட்களுக்கு குறைவில்லை. ஒரு நாளைக்கு ஒரு ஆளுக்கு 4 அணு வீதம் தினம் 10, 12 ஆட்கள் வேலை செய்தால், ஒரு மாதம் 25 முதல் 30 வரையில் ரீம் பூல்ஸ்காப் (Foolscap) அளவு காகிதம் தயார் செய்யலாம். கூழ் நன்ருக யிருந்தால், நல்ல காகிதம் கிடைப்பது நிச்சயம். ஒரே மாதிரியான மெல்லிய காகிதம் கிடைக்க, தூக்குவதில் அனுபவத்தில் திறமை பெற வேண்டும். ஆதிமுதல் முடிவு வரையில் சுத்தமாக செய்வது மிகவும் முக்கியம். இல்லையேல் கிடைக்கும் காகிதம் திருப்திகரமானதாக இருக்காது.

கிராப்டு காகிதம் (Kraft paper) என்பது வாழை நாரில் பசை மாவு கலந்து செய்யப்படுகிறது.

முக்கால் தூளான கந்தை கூழ், நன்ருக கூழான புல், வைக்கோல் கூழ், கனமாகவும், ஒரே மாதிரியாகவும், சைஸ் செய்யாமலும் தூக்கினல் பிளாடிங் காகிதம் கிடைக்கிறது.

கந்தை கோணிப்பை, சணல் கயறு இவைகளிலிருந்து கூழ் செய்ய அவைகளை சிறு துண்டுகளாக வெட்டி, 10 சத விகிதம் காஸ்டிக் சோடா உப்போடு 4-மணி நேரம் கொதிக்கவைத்து, ஒரு துணியில் கழுவு, துண்டு துண்டாக ஒரு உலக்கையால் நன்ருக அடிக்கவேண்டும். 5, 6-மணி அடித்தவுடன், கழுவி, மேலும் 5-சத விகிதம் காஸ்டிக் சோடாவை சேர்த்து, 4-மணி நேரம் கொதிக்கவைத்து, ஒரு நாள் நன்ருக அடித்து, கழுவு, வெள்ளையாக்கவேண்டும். நன்ருக கூழாக்கப் பட்ட கந்தை கூழ் 25-சத விகிதமும், நன்ருக கூழாக்கப்பட்ட நெல் வைக்கோல் கூழ் 75-சத விகிதமும், தேவையான கனத்தில் தூக்கப்பட்டு, நன்ருக தயார் செய்யப்பட்ட வச்சிரபசையில் 'சைஸ்' செய்யப்பட்டு, நன்ருக உலர்ந்தால் தான், நல்ல பத்திரம் எழுதும் காகிதம் கிடைக்கிறது. நன்ருக கூழாக்கப்பட்ட புல் அல்லது நெல் வைக்கோல் கூழ் வெளுப் பாக்கப்பட்டு, 'இன்ஜின் சைஸ்' செய்யப் பட்டு, பளபளப் பாக்கப்பட்டால், நல்ல எழுதும் காகிதம் கிடைக்கிறது. தொட்டி கூழில் தேவையானபடி நிறம் கலந்து நிறமுள்ள காகிதம் செய்யலாம். வர்ணத்துடன் பசை மாவு கலந்து இரட்டையாக மடித்த காகிதத்தின் ஒரு பக்கம் தடவி, பிரித்து, உலர்த்தினல், நல்ல 'மார்பிள்' (Marble) காகிதம் கிடைக்கிறது.

இந்த மிக்க உபயோகமான கைத்தொழிலை அனைவரும் ஆதரிப்பது மிகவும் அவசியம், நம்முடைய கடமை.

விஞ்ஞான சாஸ்திரிகளும், மற்றவர்களும் இது விஷயமாக மேலும் ஆராய்ச்சி செய்து நூதன முறைகளைக் கண்டுபிடிக்க வேண்டும். இது விஷயமாக இன்னும் விவரமாக அறிய விரும்புவோர்கள் அடியில் கண்ட புத்தகங்களைப் பார்க்கவும்.

1. K. R. ஜோஷி, B. Sc. எழுதி, வர்தா, மகன் வாடி அகில இந்திய கிராமத் தொழில் சங்கத்தாரால் பிரசுரிக்கப்பட்ட "குடிசைத் தொழிலாக காகிதம் செய்தல்" என்ற புத்தகம்.

2. ஸ்ரீ சதிஷ் சந்தாதாஸ் குப்தா ‘ ராஷ்ட்ரவாணி ’ என்ற பத்திரிகையில் 1939 எழுதிய ‘ கையால் காகிதம் செய்தல் ’ என்ற தொடர்ச்சியான வியாசங்கள் இப்போது அது கல்கத்தா, ஸோடாபூர், காதி பிரதிஷ்டன் என்னும் இடத்தில் புத்தக ரூபமாக கிடைக்கிறது.

சென்னை கோடம்பாக்கம் ஹரிஜன தொழில் பள்ளிக்கூடத்திலும், வர்தா மகன் வாடி, அகில இந்திய கிராமத் தொழில் சங்கத்திலும், கல்கத்தா, ஸோடாபூர், காதி பிரதிஷ்டனிலும் இன்னும் சில இடங்களில் தகுந்த பயிற்சி அளிக்கப்படுகிறது. சில மாகாண கவர்மெண்டார், தொழில் இலாகா மூலம் கையால் காகிதம் செய்வதை குடிசைத் தொழிலாக செய்ய ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதேபோல் அகில இந்திய நூல் நூற்போர் சங்கத்தின் மாகாண கிளை ஸ்தாபனங்களும், ஹரிஜன சேவை சங்கமும் செய்து வருகின்றன.

காகிதம் தயார் செய்வதிலிருந்து பல சில்லரை தொழில் விருத்தியடையலாம். அநேகருக்கு வேலை கிடைக்கும். அதனுடைய எதிர்காலம் மிகவும் உற்சாகம் தருவதாகவே இருக்கிறது.

வர்த்தமானங்களும், குறிப்புகளும்.

மலேரியா நோயினால் நம் தேசத்தில் மரணமடைபவர்கள் எண்ணிக்கை தெரியுமா?

100 ஜனங்களில் 40 பேர் இதற்கு இரையாகிறார்கள் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

* * *

நம் தேசத்தில் புட்டிப் பால் தயாரிப்பு.

பெங்களூர் இண்பீரியல் பால் ஆராய்ச்சி பண்ணையில் நடத்தின பரிசைஷகளின் பலனாக ஏராளமாக பாலை சுத்தமானதும், மாவு ரூபமாயுமுள்ளதாக செய்யப்பட இடமிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த ஆராய்ச்சியின் பயனாய் பசும் பால், எருமைப் பால், கலந்த பால் கூட மாவு ரூபமாக ஒரு சாதனம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. மேல் நாடுகளில் பாலை கெடாமல் இருக்க அனுசரிக்கப்பட்டுவந்த முறைகள் நம் தேசத்திற்கு சரிப் பட்டு வரவில்லை யாதலால், இது விஷயமாய் ஒரு புது முறை கண்டுபிடிக்கப்பட் டிருக்கிறது.

* * *

ஒதுக்கப்பட்ட நிலங்களை தற்காலிகமாக கொடுப்பது.

1352, 1353, 1354 பசலிகளில் தீர்வையன்னியில் யுத்தம் நடக்கும் வரையில், தீர்வை விதிக்கப்பட்டதும், விதிக்கப்படாததும் சில பொது காரியங்களுக்காக ஒதுக்கப்பட்டு ஆனால் அப்படி உபயோகப்படுத்தபடாத நிலங்களை தற்காலிகமாக கொடுக்க அனுமதித்திருக்கிறார்கள். அதன் நிபந்தனைகளாவன: (1) ஒரு பொறுப்பு வாய்ந்த அந்த இலாகா உத்தியோகஸ்தர் அதற்கு சம்மதிக்க வேண்டும். (2) மூன்று வருஷங்களுக்கு ஆகாரப் பயிர்கள்தான் பயிர் செய்யவேண்டும். (3) அப்படி பயிர் செய்வதால் அந்த நிலங்கள் எந்த உபயோகத்திற்காக உத்தேசிக்கப்பட்டிருக்கின்றனவோ, அதற்கு குந்தகம் எற்படக்கூடாது.

* * *

கிராம சிப்பந்திகளின் சம்பள உயர்வு.

கிராம உத்தியோகஸ்தர்கள் கோரிக்கைக்கு இணங்கி கவர்மெண்டார் தற் சமயம் இருக்கும் அதிக விலையுயர்வை உத்தேசித்து அவர்களின் சம்பளத்தை அதிகப்படுத்த தீர்மானித்திருக்கிறார்கள். 1926, 1932-இல் விதித்த சம்பள வெட்டை இரண்டு விஷயங்கள் தவிற, மற்றபடி எடுத்துவிட தீர்மானிக்கப்பட் டிருக்கிறது. அந்த இரண்டு விலக்குகளாவன: (1) ரயத்துவாரி பிரதேசங்களில் கிராம முனிசீப்புகளின் சம்பளத்தில் 1926-இல் விதித்த வெட்டு 1 ரூபாய்க்கு அடக்கப்படும். (2) ஜமீன்தார் பிரதேசங்களில் 1926 வருஷ வெட்டுக்கு முன்

மாதச் சம்பளம் 8 ரூபாய் பெற்றுக்கொண்டிருந்த தலையாரிகளுக்கு 1926-இல் விதிக்கப்பட்டு 1 ரூபாய் வெட்டு எடுக்கப்படமாட்டாது. இதனால் கவர்மெண்டுக்கு ஏற்படும் செலவு $9\frac{1}{2}$ லக்ஷ ரூபாய்.

* * *

ஏரிகரை சாகுபடி செய்தல்.

ஆகாரப் பயிர்கள் செய்வதை அதிகப்படுத்த, கர்நூல் ஜில்லா போர்டு பிரத்தியேக உத்தியோகஸ்தரான, ராவ் பகதூர் சேஷா ரெட்டி அவர்கள் கலெக்டர் யோசனைப்படி, ஜில்லாவிலுள்ள ஏரிக்கரைகளில் நஞ்சை ஆகார பயிர்கள் சாகுபடி செய்ய அனுமதித்திருக்கிறார்கள்.

* * *

புல் வெறுக்கும் மாடுகள்.

சென்னை மாகாணம், சேலம், வட ஆற்காடு சமீபமுள்ள மலைகளுக்கருகாமையிலிருக்கும் சில கிராமங்களில் சாதாரணமாக புல் தின்னாமல் துருஞ்சி இலைகளையும் கொழுந்தையும் தின்னும் ஒரு ஜாதி மாடுகளை குடியானவர்கள் வளர்க்கிறார்கள். இந்த ஜாதி மாடுகளின் குணங்களை நன்கறிந்து, நல்ல பயிர் நிற்கும் வயல்களிடையே வழியில் இவைகளை மேயவிட்டு விடுகிறார்கள். ஒதுக்கப்படாத காடுகளில் தங்களுக்குத் தேவையான ஆகாரத்தைத் தேடிக்கொண்டு இவைகள் தினம் 10, 12 மைல்கள் சுலபமாக திரிகின்றன. கரவை பசுக்களுக்கும் தயார் செய்யப்பட்ட உணவு கொடுக்கப்படுவதில்லை. அவைகள் புஷ்டி சத்து செழிப்பாகவுள்ள தீனிகளை தின்பதால், இவை தேவையில்லை போலும்.

* * *

குண விசேஷங்கள்.

இந்த பிராணிகள் மெல்லியனவாகவும், சுறு சுறுப்பாகவும், சாதாரண ஆகாரமுள்ளதாகவும் வேகமாக நடக்கக்கூடியனவாகவும் இருக்கின்றன. பசு ஒரு வேலைக்கு 1 படி $1\frac{1}{2}$ படி (அ.து. 4 முதல் 6 பவுண்டு ஒரு தினம்) பால் கொடுக்கிறது.

சாணி பச்சையாக இருக்கிறது.[4] அவைகளின் சாணியும், மூத்திரமும் மிகவும் எருவு சத்து கொண்டது. அவைகளுக்காகத்தான் முக்கியமாக அவை வளர்க்கப் படுகிறது. ஆட்டு மந்தை கட்டுவது, மாடு கூட்டங்களை இரவில் சாகுபடி செய்யும் நிலங்களில் கட்டுகிறார்கள்.

* * *

மைசூர் பஞ்சாயத்துகள்.

1940-41 வருஷத்தில் மைசூர் கிராம பஞ்சாயத்துகளின் வேலையைப்பற்றி மைசூர் கவர்மெண்டார் வெளியிட்டிருக்கும் அறிக்கையிலிருந்து அவ் வருஷம் 12,73,371 ரூபாய் வருமானமும், 1,26,145 ரூபாய் செலவும் கொண்டு 12,076 பஞ்சாயத்துகள் இருந்ததாகத் தெரிகிறது. வருஷ முடிவில் நிசர நின்ற தொகை 24,93,415 ரூபாய். கிராம புனருத்தாரண வேலைக்கும் பஞ்சாயத்துகள் பண உதவி செய்கின்றன.

1936-இல் மைசூரில் ஆரம்பிக்கப்பட்ட கிராம புனருத்தாரண ஐந்து வருஷ திட்டம் துரிதமாக வேலை செய்யவில்லை. ஐந்து வருஷம் கழிந்து 264 கிராமங்களில்தான் வேலை செய்யப்பட்டிருக்கிறது. ஷை வேலையை துரிதமாக செய்யும் பொருட்டு 1936-இல் கவர்மெண்டு போட்ட திட்டத்தை ஆரம்பத்தில் ஒவ்வொரு தாலூகாவிலும் ஒரு ஹோப்ளி ஆரம்பிக்க ஏற்பாடாகியிருக்கிறது. (ஹோப்ளி என்பது கம்பிர்கா போல் 40 முதல் 60 கிராமங்கள் கொண்ட பிரதேசம்.)

சமஸ்தானத்தில் 364 ஹோப்ளிகள் இருக்கின்றன. இன்னும் ஐந்து வருஷத்தில் அந்த திட்டம் எல்லா ஹோப்ளிகளிலும் அமுலுக்கு வருமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

கவர்மெண்டு உத்தியோகஸ்தர் தவிர ஒவ்வொரு ஹோப்ளியிலும் பயிற்சி பெற்ற கௌரவ ஊழியரை நியமித்து அவரை அங்கேயே வசித்து எல்லா வேலைகளையும் ஒன்றுக்கொன்று ஒத்துழைத்து செய்ய கவனிக்கும்படி செய்யப்படும்.

மலயாளம் பஞ்சாயத்து போர்டு சிப்பந்திகள் மகாநாடு.

சென்ற டிசம்பர் மாதம் கள்ளிக்கோட்டையில் ஷை மகாநாடு நடந்தது. ராவ் சாகிப் கே. ஏ. முகுந்தன், M. B. E. அக்கிராசனம் வகித்தார். ஜில்லா போர்டு, முனிசிபாலிடி உத்தியோகஸ்தர்களைப் போலவே தங்களுக்கும் சம்பளம், பிராவிடெண்டு பண்டு முதலியவைகள் ஏற்படுத்த வேண்டு மென்றும், எந்த பஞ்சாயத்து போர்டுக்காவது இப்படி கொடுக்க சக்தியில்லாதிருக்கும் பக்ஷத்தில், அருகாமையிலுள்ள பஞ்சாயத்தின் குமாஸ்தாவையே இங்கேயும் நியமித்து பிரயாணிபடியும் மேல் கொண்டு சம்பளத்தில் ஒரு பாகத்தை கொடுக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டு மென்றும் அப்படி செய்யவும் சக்தியில்லாவிடில், அந்த பஞ்சாயத்தை பக்கத்து பஞ்சாயத்துடன் பிணைக்கும்படியும், மதராஸ் பிரத்யேக சம்பள மானுவல்படி கொடுக்கப்படும் பிரத்தியேக சம்பளம் பஞ்சாயத்து சிப்பந்திகளுக்கும் கிடைக்கும் படி செய்ய வேண்டுமென்றும், பழைய பாக்கியோடு விலை யேற்ற அதிக சம்பளத்தை கொடுக்க உத்திரவு செய்யவேண்டுமென்றும், தேர்ச்சி பெற்றவர்களையே பஞ்சாயத்து குமாஸ்தாக்களாக நியமிக்க வேண்டு மென்றும், அவர்களை ஜில்லா போர்டு, முனிசிபல் குமாஸ்தாக்கள் வேலைக்கு உயர்த்த உத்தரவு கொடுக்க வேண்டு மென்றும் மேலும் அவர்களில் திறமையானவர்களை பஞ்சாயத்து நிர்வாக உத்தியோகஸ்தர்களாக நியமனம் செய்ய வேண்டுமென்றும், தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. ஸ்ரீ கே. பி. நாராயண நாயர் கௌரவ பொக்கிஷதாராக ஒரு ஜில்லா சங்கம் ஏற்படுத்தப்பட்டது. மற்ற ஜில்லாக்களிலுள்ள பஞ்சாயத்து போர்டு சிப்பந்திகளையும் ஜில்லா சங்கங்கள் ஸ்தாபிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டது.

மதறாஸ் ப்ரோவின்ஷியல் கோஆபரேடிவ் பாங்க், லிமிடெட்.

(1912 வருடம் II-வது ஆக்ட் ஆகிய 1932 வருடம் VI ஆக்டின்கீழ் ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.)

தலைமை ஆபீஸ்.

சைனா பஜார் ரோட், மதராஸ். போன் நெ. 2390.

மைலாப்பூர் பிராஞ்சு :

லஸ் சர்ச் ரோட், மைலாப்பூர், போன் நெ. 3334.

எழும்பூர் பிராஞ்சு:

ஹிப்ராஹிம் காலனி, எழும்பூர், போன் நெ. 8510.

பிரசிடேண்டு :

மிஸ்டர் டி. எ. ராமலிங்கம் செட்டியார், பி.எ., பி.எல்., எம்.எல்.சி.

ஸெக்ரடேரி :

டி. ராகவேந்திர ராவ்.

இந்த நாட்டிலிருக்கும் விவசாயிகளுக்கு பொருப்பு சம்பாதித்துக் கொடுப்பதில் இந்த பாங்கு முக்கிய ஸ்தாபனமாகும்.

இந்த பாங்கு மதறாஸ் கார்பரேஷனுக்கும், மதறாஸ் யூனிவர்ஸிடி, அண்ணாமலை, ஆந்திரா யூனிவர்ஸிடிகளுக்கும், மற்ற லோகல் போர்டுகள், டிஸ்டிரிக்ட் முனிசிப்பாலிடிகளுக்கும் பாங்காக இருக்கின்றது.

விதிகள், வியாபார நிபந்தனைக்கும் கீழ்கண்டவருக்கு எழுதவும் :

ஸெக்ரடேரி,
தலைமை ஆபீஸ்
அல்லது
பிராஞ்சுகள்.

வெளியிட்டவர், பிரசுரகர்த்தா, மிஸ்டர். வி. வெய்யன்னா, பி.எ., பி.எஸ்.,
187, ராயப்பேட்டை ஹைரோட், ராயப்பேட்டை, மதராஸ்.

மதறாஸ் மவுண்ட் ரோட் நெ. 1/17 ல் அமைந்திருக்கும்
சென்ட்ரல் கோஆபரேடிவ் அச்சுக்கூடத்தில்
மிஸ்டர் ஆர். கிருஷ்ணமாச்சாரி, பி. எ., அவர்களால் பதிப்பிக்கப்பட்டது.

ஸௌத் இந்தியா கோவாபரேடிவ் இன்ஷியூரென்ஸ் ஸொஸைடி, லிமிடெட், மதராஸ்.

ஸ்ரீ பி. எஸ். குமாரஸ்வாமி ராஜா, எம். எல். ஏ., (பிரஸிடேண்ட்.)

கோவாபரேடிவ் இன்ஷியூரென்ஸ் ஒன்றே உங்களுக்குக் குறைந்த பிரிமிய விகிதங்களில் மிகுந்த பாதுகாப்பதோடு, நல்ல வருஷவாரி லாபத்தொகையும் தாராளமான பாலிஸி நிபந்தனைகளும் மற்றும் உன்னத சலுகைகளும் காட்டவல்லது.

லாபத்தொகை முழுவதும் பாலிஸிதார்களையே அடைகிறது. இந்த ஸொஸைடி அவர்களுக்கே சொந்தம், அவர்களுக்காகவே இருக்கிறது—அவர்களாலேயே நடத்தப்பெறுகிறது.

மிகச்சிக்கனமாக காரியாதிகள் நடத்தப்பட்டு, அரசாங்கத்தாரின் நேரான கண்காணிப்பில் பலமான க்ஷேமநிதி முதலியன ஏற்படுத்திக்கொண்டிருப்பதால் அதிக க்ஷேமகரமாக உள்ளது.

பாலிஸி தொகை	—	**1,30,00,000.**
க்ஷேமநிதி	—	**10,00,000.**

உங்களுக்குத் தக்க பாலிஸி விபரத்திற்கு எழுதுங்கள்.

வி. வெங்கடாசலம், எம். ஏ., பி. எல்.,
காரியதரிசி.